SINCE 2013

We Shine Academy®

guiding you to get through

TNPSC | TNUSRB | TET | SSC | BANK EXAM

# DAILY CURRENT AFFAIRS ON 20/03/2026




The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams

8939 144 344 www.weshineacademy.com

# சென்னை வானிலை ஆய்வு மைய புதிய தலைவர் பொறுப்பேற்பு

**சென்னை, மார்ச் 19:** சென்னை வானிலை ஆய்வு மையத்தின் புதிய தலைவராக சிவானந்த தாமோதர பை பொறுப் பேற்றார்.



சிவானந்த தாமோதர பை

சென்னை தென் மண்டல வானிலை ஆய்வு மையத்தின் தலைவராக இருந்த பாலசந்திரன் 2025-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்துடன் ஓய்வு பெற்றார். இதையடுத்து மூத்த விஞ்ஞானியான பி.அமுதா பொறுப்பு தலைவராக நியமிக்கப்பட்டார். தற்போது, இந்தப் பணியிடத்துக்கு புதிய தலைவராக மூத்த விஞ்ஞானி சிவானந்த தாமோதர பை வியாழக்கிழமை பதவியேற்றுக்கொண்டார்.

இவர், தில்லியில் உள்ள புவி அறிவியல் அமைச்சகத்தில் திட்ட இயக்குநர், இந்திய வானிலைத் துறையின் வேளாண் வானிலை ஆலோசனைப் பிரிவின் தலைவர் உள்ளிட்ட பல் வேறு உயர் பதவிகளை வகித்துள்ளார்.

மேலும், இவர் சுமார் 80 ஆய்வுக் கட்டுரைகளையும், 25 தொழில் நுட்ப அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளார்.

கடந்த 2008-இல் இந்திய வானிலை ஆய்வு மையத்தின் சிறந்த சேவைக்கான விருதையும், 2016-இல் பருவமழை ஆராய்ச்சி குறித்த சிறந்த கட்டுரைக்கான விருதையும், 2024-இல் உலக வானிலை அமைப்பின் பாராட்டுச் சான்றிதழ் உள்ளிட்ட பல் வேறு விருதுகளையும் பெற்றுள் ளார்.

# இந்திய மின் துறையில் முதலீடு: பிரதமர் மோடி அழைப்பு

**புது தில்லி, மார்ச் 19:** இந்திய மின் உற்பத்தி துறையில் முதலீடு செய்யுமாறு, உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வியாழக்கிழமை அழைப்பு விடுத்தார்.

உலக அளவில் மிக வேகமாக வளரும் பெரும் பொருளாதார நாடான இந்தியா, தனது எரிசக்திப் பயணத்தில் திருப்புமுனையான காலகட்டத்தில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தில்லியில் மத்திய மின்சாரத் துறை சார்பில் பாரத மின்சார உச்சிமாநாடு-2026 வியாழக்கிழமை தொடங்கியது. நான்கு நாள்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டின் தொடக்க நிகழ்வில், பிரதமர் நரேந்திர மோடியின் உரையை மத்திய மின்சாரத் துறை செயலர் பங்கஜ் அகர்வால் வாசித்தார்.

**பிரதமரின் உரையில் கூறப்பட்டுள்ளதாவது:** பாரத மின்சார உச்சிமாநாடு, நாட்டின் வளர்ச்சிக்கு உத்வேகமூட்டும் வகையில் அர்த்தமுள்ள விவாதங்கள் மற்றும் நீடித்த கூட்டாண்மைகளை ஊக்குவிக்கும் என நம்புகிறேன்.

புதிய யோசனைகளின் பரிமாற்றம், வலுவான ஒத்துழைப்பு, வளர்ச்சி- வாழ்க்கை மேம்பாட்டுக்கான பாதையை வகுப்பதில் ஒட்டுமொத்த மின் துறை மற்றும் எரிசக்தி கட்டமைப்பை ஒற்றை தளத்தில் ஒருங்கிணைப்பதே உச்சிமாநாட்டின் நோக்கமாகும்.

**2047-க்குள் வளர்ந்த பாரதம்:**



வளர்ச்சிக்கு புத்தாற்றல் அளித்து, நிலைத்தன்மையைக் கொண்டு வரும் நமது கூட்டு முயற்சிகளை இது பிரதிபலிக்கிறது. 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த பாரதம் என்ற கண்ணோட்டத்தையும் முன்னெடுத்துச் செல்கிறது.

உலக அளவில் மிக வேகமாக வளரும் பெரும் பொருளாதார நாடாகவிளங்கும் இந்தியா, தனது எரிசக்தி பயணத்தில் திருப்புமுனையான காலகட்டத்தில் உள்ளது. எனவேதான், துறைசார் உள்கட்டமைப்புகளை வலுப்படுத்துவதுடன், அனைவருக்கும் நம்பகமான எரிசக்தி அணுகலை உறுதி செய்து வருகிறோம். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் நாம் அடைந்துவரும் முன்னேற்றமே, இந்த உறுதிப்பாட்டுக்கு சான்றாகும். மரபுசாரா எரிசக்தி திறனில் 50 சதவீதத்துக்கும் மேல் எட்டப்பட்டுள்ளது.

இதன் மூலம் 2030-ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் மரபுசாரா மின்உற்பத்தி என்ற இலக்கை எட்ட தெளிவான பாதை அமைக்கப்பட்டுள்ளது.

**துணிச்சலான சீர்திருத்தங்கள்:** ஒரே சூரியன், ஒரே உலகம், ஒரே மின்கட்டமைப்பு போன்ற இந்தியாவின் முன்னெடுப்புகள், உலகளாவிய ஒத்துழைப்புக்கான தொலைநோக்குப் பார்வையை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

மீள்திறன் கொண்ட விநியோக சங்கிலியைக் கட்டமைத்தல், மின்கல உற்பத்தி மேம்பாடு, பசுமை எரிசக்தி சார்ந்த வேலைவாய்ப்புகள் உருவாக்கம், துணிச்சலான சீர்திருத்தங்களின் மூலம் முதலீடுகளை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகளால் நம்பகமான எரிசக்தி கூட்டாளியாக இந்தியா உருவெடுத்துள்ளது.

இந்தியாவின் மேம்பாட்டுக்கு அணுசக்தியை நிலையான முறையில் பயன்படுத்த வகை செய்யும் சட்டத்தின்கீழ், அணுமின் உற்பத்தி துறையில் தனியாருக்கு புதிய வாயில்கள் திறக்கப்பட்டுள்ளன. எனவே, இந்தியாவில் உருவாக்கவும், இந்தியாவில் புத்தாக்கங்களில் ஈடுபடவும், இந்தியாவில் முதலீடு செய்யவும், இந்தியாவில் தொழிலை விரிவாக்கவும் உலக முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். இந்தியாவுடன் இணைந்து வளர வேண்டும் என்பதே சர்வதேச சமூகத்துக்கான எனது அழைப்பு என்று தனது உரையில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com

# உலகின் மகிழ்ச்சிகர நாடுகள்: இந்தியாவுக்கு 116-ஆவது இடம்

## பின்லாந்து தொடர்ந்து முதலிடம்

லண்டன், மார்ச் 19: உலகின் மகிழ்ச்சிகரமான நாடுகளின் பட்டியலில் இந்தியா 116-ஆவது இடத்தை பிடித்துள்ளது. கடந்த ஆண்டு 118-ஆவது இடத்தில் இருந்த இந்தியா இப்போது 116-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இந்த தரவரிசையின்படி, தனது அண்டை நாடுகளை விட இந்தியா பின்தங்கியுள்ளது.

சர்வதேச மகிழ்ச்சி தினம் வெள்ளிக்கிழமை (மார்ச் 20) கொண்டாடப்படுவதை முன்னிட்டு, நிகழாண்டுக்கான மகிழ்ச்சிகரமான நாடுகளின் பட்டியல் வியாழக்கிழமை வெளியிடப்பட்டது.

அமெரிக்காவின் கேலப் ஆய்வு நிறுவனம் மற்றும் ஐ.நா.வின் நிலையான வளர்ச்சி தீர்வுகள் அமைப்புடன் இணைந்து பிரிட்டனின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழக நல்வாழ்வு ஆய்வு மையம் இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

**முதலிடத்தில் பின்லாந்து:** தனிநபர் சராசரி உற்பத்தி, சுதந்திரம், நன்கொடைகள், ஆரோக்கியமான ஆயுட்காலம், ஊழலற்ற நிர்வாகம் என பல்வேறு காரணிகளின் அடிப்படையில் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட இந்த தரவரிசை பட்டியலில்தொடர்ந்து 9-ஆவது ஆண்டாக முதலிடத்தை தக்கவைத்துள்ளது பின்லாந்து.

2 முதல் 10 வரையிலான இடங்களில் ஐஸ்லாந்து, டென்மார்க், கோஸ்டா ரிகா, ஸ்வீடன், நார்வே, நெதர்லாந்து, இஸ்ரேல், லக்ஸம்பெர்க், ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன. அமெரிக்கா 23-ஆவது இடத்தில் உள்ளது.

இந்தப் பட்டியலில் இந்தியா 116-ஆவது இடத்தில் உள்ளது.

கடந்த ஆண்டு 118-ஆவது இடத்திலும், 2024-இல் 126-ஆவது இடத்திலும் இந்தியா இருந்தது.

**'இந்தியர்கள் நம்பிக்கை மிக்கவர்கள்':** உலகின் மகிழ்ச்சிகரமான நாடாக பின்லாந்து நீடிப்பது குறித்து இந்தியாவுக்கான அந்நாட்டின் தூதர் கிம்மோ லாடேவிர்டா கூறுகையில், 'நீண்ட கால வளர்ச்சி மற்றும் சமூக நம்பிக்கையால் உலகின் மகிழ்ச்சி குறியீட்டில் பின்லாந்து தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

பின்லாந்து மகிழ்ச்சியான நாடு என்றால், இந்தியர்கள் உலகிலேயே நம்பிக்கைமிக்க மக்கள்.

இந்தியர்களின் நம்பிக்கையும், பின்லாந்து நாட்டவரின் மகிழ்ச்சியும் பல்வேறு வழிகளில் வெற்றிகமாக ஒன்றிணைய முடியும்' என்றார்.

**உலகின் மகிழ்ச்சியற்ற நாடு ஆப்கன்:** நமது அண்டை நாடான ஆப்கானிஸ்தான், உலகின் மகிழ்ச்சியற்ற நாடு என்ற முத்திரையுடன் பட்டியலில் தொடர்ந்து கடைசி இடத்தில் (147) உள்ளது.

| அண்டை நாடுகள் | 2026 | 2025 | 2024 |
|---|---|---|---|
| சீனா | 65 | 68 | 60 |
| நேபாளம் | 99 | 92 | 93 |
| பாகிஸ்தான் | 104 | 109 | 108 |
| வங்கதேசம் | 127 | 127 | 129 |
| இலங்கை | 134 | 134 | 128 |
| இந்தியா | 116 | 118 | 126 |




# 2 குழந்தைகளுக்கு அதிகமாக உள்ள குடும்பத்துக்கு ரூ. 25,000 ஊக்கத்தொகை

## மக்கள்தொகை மேலாண்மை கொள்கையை அறிவித்த ஆந்திர முதல்வர்

அமராவதி, மார்ச் 19: இரண்டு அல்லது மூன்று குழந்தைகளைப் பெற்றுள்ள குடும்பத்துக்கு ரூ. 25,000 ஊக்கத்தொகை உள்ளிட்ட மக்கள்தொகையை அதிகரிப்பதற்கான பல்வேறு புதிய அம்சங்களுடன்கூடிய மாநில மக்கள்தொகை மேலாண்மை கொள்கையை தெலுங்கு புத்தாண்டான யுகாதி நாளில் (வியாழக்கிழமை) ஆந்திர முதல்வர் என். சந்திரபாபு நாயுடு அறிவித்தார்.

முதியவர்களுக்கான சிறந்த பராமரிப்பை உறுதிப்படுத்தவும், சமூக நிலைத்தன்மையை விரிவுபடுத்தும் வகையிலும் கூட்டுக் குடும்ப முறைக்குப் புத்துயிர் கொடுப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக முதல்வர் அப்போது கூறினார்.

ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் அரசு சார்பில் நடத்தப்பட்ட யுகாதி விழாவில் பேசும்போது இந்த அறிவிப்பை முதல்வர் சந்திரபாபு நாயுடு வெளியிட்டார். அப்போது அவர் பேசியதாவது:

பிறப்பு விகிதம் குறைந்து வருவதும், வயது முதிந்தவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதும் உலக அளவிலான தீவிர பிரச்னையாக உருவெடுத்து வருகிறது. இந்தப் போக்கு, தற்போது தென் இந்தியாவிலும் தற்போது தொடங்கியுள்ளது.



சந்திரபாபு நாயுடு

இளம் மக்கள்தொகை எண்ணிக்கை இவ்வாறு தொடர்ந்து குறைந்து வருவது, வரும் காலங்களில் பணியிடங்களில் மனிதப் பங்கேற்பு குறைந்து, இயந்திரங்கள் மற்றும் தானியங்கிகளின் ஆதிக்கத்துக்கு வழிவகுத்துவிடும்.

அந்த வகையில், குடும்பக் கட்டுப்பாடு மீதான எனது கண்ணோட்டம், தற்போது மக்கள்தொகை மேலாண்மைக்கான பரந்த உத்தியாக மாறியுள்ளது. மக்கள்தொகை சமநிலையைப் பேண, பெரிய குடும்பங்களே இன்றியமையாதவை.

சமூக நிலைத்தன்மையைப் பேணுவதற்கு, ஒரு தம்பதிக்கு 2.1 விகிதத்தில் குழந்தைகள் இருக்க வேண்டும். ஆனால், மாநிலத்தில் இந்த விகிதம் 1.5 விகிதமாகக் குறைந்து. இது நீண்டகால மக்கள்தொகையில் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தும்.


முன்னர், 'ஒரு குழந்தை பெற்றுக்கொள்வது சிறந்தது; 2 குழந்தைகள் இருக்கலாம்; 3 குழந்தைகள் வேண்டாம்' என்று நான் கூறினேன். ஆனால், இப்போது அதை தலைகீழாக மாற்றுகிறேன்.


ஒரு குழந்தை போதாது; இரண்டு குழந்தைகள் இருப்பது நல்லது; மூன்று குழந்தைகள் இருப்பது மேலும் சிறந்தது.

அந்த வகையில், மாநிலத்தில் மக்கள்தொகையை அதிகரிக்கச் செய்யும் வகையிலும், மக்கள்தொகை மேலாண்மை கொள்கையை மாநில அரசு கொண்டு வந்துள்ளது. இதன் கீழ், மக்கள் மதிப்பு சார்ந்த வாழ்க்கை முறைக்குத் திரும்பவும், கூட்டுக் குடும்ப முறைக்குப் புத்துயிர் அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், 2 அல்லது 3 குழந்தைகளைப் பெற்றுள்ள குடும்பங்களுக்கு இந்தக் கொள்கையின் கீழ் ரூ. 25,000 ஊக்கத் தொகை அளிக்கப்படும் என்றார்.

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com


Special Intensive Revision (SIR) – 2026
Search Your Name in Last SIR
Submit Document Against Notice issued
வாக்காளர் பட்டியலில்
உங்களது பெயர் உள்ளதா?
வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் உள்ளதா?
என்பதை voters.eci.gov.in என்ற
இணையதளம் மூலம் சரிபார்த்துக் கொள்ளலாம்.
voters.eci.gov.in இணையதளத்தில்
Search your Name in vote List-ஐ க்ளிக்
செய்து தேவையான விவரங்களை கொடுத்து
உங்களது பெயரை சரிபார்த்துக் கொள்ளலாம்


SUVIDHA 2.0
NEWS UPDATE
ஆன்லைனில் வேட்புமனு தாக்கல் - புதிய வசதி
தமிழகத்தில் முதல் முறையாக சட்டமன்ற
தேர்தலுக்காக புதிய வசதியை அறிமுகம்
செய்யும் தேர்தல் ஆணையம்
https://suvidha.eci.gov.in என்ற பிரத்யேக இணையதளத்தில்
வேட்புமனு தாக்கல் செய்யலாம்; பிரத்யேக இணையதளத்தில்
வேட்பாளர்கள் தங்களுக்கென ஒரு தனிப்பட்ட கணக்கை
உருவாக்கலாம்


தலைமுறை
தமிழ்ச்சிறுகதையின் தடங்கள்
சாகித்ய அகாடமி விருது
2025ஆம் ஆண்டுக்கான
சாகித்ய அகாடமி விருது எழுத்தாளர்
ச.தமிழ்ச்செல்வனுக்கு வழங்கப்படுகிறது
'தமிழ்ச் சிறுகதையின் தடங்கள்' என்ற
புத்தகத்துக்காக ச.தமிழ்ச்செல்வனுக்கு சாகித்ய
அகாடமி விருது அறிவிப்பு


இந்தியாவின் "டாப் 10" மிகப்பெரிய
மாநிலங்கள் (பரப்பளவில்)
1 ராஜஸ்தான் 342,239 ச.கி.மீ.
2 மத்திய பிரதேசம் 308,245 ச.கி.மீ.
3 மகாராஷ்டிரா 307,713 ச.கி.மீ.
4 உத்தரப் பிரதேசம் 240,928 ச.கி.மீ.
5 குஜராத் 196,024 ச.கி.மீ.
6 கர்நாடகா 191,791 ச.கி.மீ.
7 ஆந்திரப் பிரதேசம் 162,968 ச.கி.மீ.
8 ஒடிஷா 155,707 ச.கி.மீ.
9 சத்தீஸ்கர் 135,192 ச.கி.மீ.
10 தமிழ்நாடு 130,058 ச.கி.மீ.
Tnpsc Pre Coaching


ONE BATTLE AFTER ANOTHER
ஒரே படத்திற்கு 6 ஆஸ்கர் விருது
98வது ஆஸ்கர் விருதுகள் வழங்கும் விழாவில்
'One Battle After Another' திரைப்படம்
6 விருதுகளை வென்றுள்ளது
சிறந்த படத்தொகுப்பு, சிறந்த தழுவல் திரைக்கதை, சிறந்த
நடிகர் தேர்வு, சிறந்த துணை நடிகர், சிறந்த இயக்குநர் மற்றும்
சிறந்த படம் என மொத்தம் 6 விருதுகளை
வென்று இம்முறை அதிக ஆஸ்கர்களை பெற்றுள்ளது
One Battle After Another


MapmyIndia
bhuvan
இஸ்ரோவின் புதிய செயலி அறிமுகம்
புவன் என்ற பெயரில் மொபைல் செயலி மற்றும்
இணையதளத்தை அறிமுகப்படுத்தியது இஸ்ரோ
சுற்றுலாவை மேம்படுத்தவும், இந்தியா முழுவதும் உள்ள
பாரம்பரிய மற்றும் கலாச்சார தலங்களை கண்காணித்து
பாதுகாக்கவும் செயலி மற்றும் இணையதளம் அறிமுகம்


"பாடத்திட்டம் மாற்றம்"
"மாநில கல்விக் கொள்கையை பின்பற்றி ஒன்று முதல்
எட்டாம் வகுப்பு வரை பாடத்திட்டம் மாற்றியமைக்கப்படும்
பாடத்திட்டங்களை மாற்றி அமைக்க, பாடவாரியாக
நிபுணர் குழு அமைக்கப்படும். மாற்றியமைக்கப்படும்
புதிய பாடத்திட்டங்கள் 2027-2028.ல் அமலுக்கு வரும்
இரண்டாவது கட்டமாக 9 முதல் 12 ஆம் வகுப்பு
வரையான பாடத்திட்டங்கள் மாற்றி அமைக்கப்படும்
என்றும் தகவல்"
- பள்ளிக் கல்வித்துறை அறிவிப்பு
முக்கிய செய்தி
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்
THANTHI TV


NOT TO BE OPENED BEFORE COUNTING
POSTAL BALLOT PAPER
கூடுதலாக 5 துறையினருக்கு தபால் வாக்கு
அத்தியாவசியப் பணியில் இருப்பவர்கள் தபாலில்
வாக்களிக்க, தமிழக அரசின் மேலும் 5 துறைகளை புதிதாக
சேர்த்து தேர்தல் ஆணையம் உத்தரவு
"அரசு போக்குவரத்து ஊழியர்கள், மின்வாரியம்,
போக்குவரத்து காவலர்கள், சிறைத் துறையினர், தீயணைப்பு
துறையினர் தபால் வாக்கு பதிவு செய்யலாம்"
- தேர்தல் ஆணையம்




The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com